நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
18.05.2024

# சிறையில் சவுக்கு சங்கர் மீது தாக்குதல்: நீதி விசாரணை நடத்த வலியுறுத்தல்

**மதுரை, மே 17:** கோவை சிறையில் யூடி யூபர் சவுக்கு சங்கர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தின.

தமிழ் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் தியாகு, மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேன், பச்சைத் தமிழகம் சுப.உதயகுமாரன், மக்கள் சிவில் உரிமைக் கழக துணைத் தலைவர் முரளி, மனித உரிமை செயற்பாட்டாளர் பேராசிரியர் அ.மார்க்ஸ், காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியகத்தின் தலைவர் மீ.த.பாண்டியன் உள்பட 20-க்கும் மேற்பட்ட மனித உரிமை அமைப்புகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கை:

காவல் துறையில் உள்ள பெண்களை இழிவுபடுத்தி பேட்டி அளித்ததாக சவுக்கு சங்கர் மீது கோவை போலீஸார் வழக்குப் பதிவு செய்து, கடந்த 4-ஆம் தேதி தேனியில் கைது செய்தனர். மேலும், அவரது வாகனத்தில் 500 கிராம் கஞ்சா வைத்திருந்ததாகவும் வழக்குப் பதியப்பட்டது.

இந்த வழக்குகளின் அடிப்படையில், கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த யூடியூபர் சவுக்கு சங்கர் மீது சிறைக் காவலர்கள் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் அவரது வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் நீதித் துறை நடுவரிடம் அவர் புகார் கூறினார்.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு, கள்ளக்குறிச்சி மாணவி ஸ்ரீமதி மரணம் போன்ற சம்பவத்தில் அரசுக்கும், காவல் துறைக்கும் சவுக்கு சங்கர் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தது கண்டிக்கத்தக்கது. காவல் துறையில் உள்ள பெண்களை இழிவுபடுத்தி பேட்டி கொடுத்த வழக்கில் அவருக்கு சட்டப்படி தண்டனை பெற்றுத் தருவதில் மாற்றுக் கருத்து இல்லை.

அவர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை விடுத்து, சவுக்கு சங்கர் மீது தமிழக அரசும், காவல் துறையும் அடக்குமுறையைக் கையாள்வது கண்டிக்கத்தக்கது.

சிறையில் அவரைத் தாக்கி, கையை உடைத்தது தண்டனைக்குரிய குற்றமாகும். இதுதொடர்பாக உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றனர்.